தென்னகத்

தலைவன்

ஆசிரியர் : தினகரன்

மலர் 1	23—6—63	தி. மு. கழக வார ஏடு	விலை 16 காசு	இதழ் 32

தேசிய கீதத்திற்கு அவமரியாதை!

திரைப்பட அரங்கில் கேலிக்கூத்து!

தேசப்பற்று கடைச்சரக்கா? திரைப்பாட்டால் அது வளருமா?

தப்பான கணக்கு!

'பாதுகாப்பு, தேசப்பற்று தேசிய உணர்ச்சி இவையாவும் விளையாட்டுத்தனமாகவும், கேலிக் கூத்தாகவும் கருதப் படுகின்ற நிலைமை இன்று இந்தியத் துணைக்கண்டத்தில் தெரிந்தோ-தெரியாமலோ அரசினரால் உருவாக்கப்பட்டு வருகிறது.

தேசப் பற்றும் — ஒருமைப் பாட்டுணர்ச்சியும் மக்களிடத்தில் இயற்கையாக இரத்தத்தோடு கலந்து உருவாக வேண்டுமே தவிர-பலாத்காரமாகத் திணிப்பதின்மூலம்,சட்டத்தால் மிரட்டுவதின்மூலம்-சந்தைக் கூட்டங்களில் வேடிக்கை விளம்பரங்கள் செய்வதின் மூலம் உண்மையான தேசப் பற்று ஒருக்காலும் வளர முடியாது. இவைகள்மூலம் போலித் தேசியம் வேண்டுமானால் அதுவும் கொஞ்சகாலத்திற்குத்தான் தலைதூக்கி நடமாட முடியும்!

திருவண்ணாமலை

தொகுதி

வாக்காளர்களே!

ஜனநாயகத்தைக்

காப்பாற்றுவீர்!

உங்கள் குடும்பக் கழகம்

தி. மு. க.

உங்கள் குடும்பத்துப் பிள்ளை

ப. உ. ச.

உங்கள் குடும்ப விளக்கு

உதயசூரியன்

திருவண்ணாமலை வெற்றி
தென்னக மொழிகளுக்கு
ஓர் பாதுகாப்பு!
மறந்துவிடாதீர்!

தவறான போக்கு!

இந்தப் போலித் தேசப் பற்றை வளர்க்கத்தான் இன்று டெல்லி அரசு முனைந்திருக்கிறதோ என்ற அச்சம் நமக்கு எழுகிறது.

வெள்ளம் வருவதற்கு முன்பே அணை போட்டுப் பாதுகாப்புச் செய்திருக்க வேண்டும். அதை விடுத்து வெள்ளம் கரைபுரண்டு ஊரை அழித்துக்கொண்டு ஓடும் பொழுது அணைக்கட்டும் வேலையில் ஈடுபடுவது புத்திசாலித் தனமாகாது. அப்படிக் கட்டப் படும் அணையும் நீண்டகாலத் திற்கு நிற்காது.

நாட்டின் தலைவாசலில் எதிரியின் காலடி ஓசை கேட்கின்ற பொழுது—அந்த ஓசையின் பயங்கரத் தன்மையை நாட்டு மக்களுக்கு முறையாக அறிவித்து—அவர்களிடத்தில் உணர்ச்சி பூர்வமான விழிப்பை உண்டாக்கி—வீட்டுக்கு ஒரு

(10-ம் பக்கம் பார்க்க)

யாருக்காக அழுதான் ஒரு திருட்டுக் கதை
எங்கே திருடினார் ஜெயகாந்தன்?

(5-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசிற்கு வால்பிடிக்கும் கம்யூனிஸ்டுகளே!

திராவிட முன்னேற்றக்கழகத்தின் இலட்சியப் பெருமையினை அரசியல் சட்டங்களின் தயவாலே உயர்ந்திருக்கும் உத்தமர்கள் உணரத் தலைப்பட்டநேரத்தில், உடைத்தெறியவும் சட்டம் கொண்டு வந்தனர். மொழிப் போராட்டத்தின் அனலும் கனலும் குறைந்திடாத தமிழகத்தின் வீரப் பண்புக்குப் பழி தேடும் மந்திரிப் பதவியினரும் மந்த மதியினரும் கழகத்தின் மீதும், தலைவர்கள் பற்றியும் தரங் கெட்ட சொற்களைப் பொழிந்து விட்டனர். ஈரோட்டுப் பெரியாரிலிருந்து அவருடைய தத்துப் பையன் வரை முதன் மந்திரியிலிருந்து பரம்பரை மந்திரி வரை, குடிமகன்களிலிருந்து ஆயுட் கைதிகள் வரை இப்படி எத்தனையோ ரகத்து எதிரிகள் எத்தனையோ பொய்யுரைகளைத் தின்று விட்டனர்.

தின்னக் கூடாத சொற்களைத் தின்று விட்ட இந்தத் திமிர்வாத ஆட்களுக்கெல்லாம் முன்னேற்றக் கழகம் முதல் எதிரியாகி விட்டது. ஆனால்

தாலே சாக்கடையை அள்ளிக் குடித்தபோதும், தாயகத்தின் பொதுச் சொத்தென மதிக்கத் தகும் மாண்புடையவர்கள் கழகத்தின் கண்ணியப் பெருமையைக் கண்டனர். களிப்பில் உயர்ந்தனர். கனி மொழியால் வாழ்ந்தனர்.

கழகத்தின் ஒளி கண்டு கதறியழும் காங்கிரசுக் கட்சி தன் காளை மாடுகளைக் காப்பாற்றிக் கொள்ள எப்பொழுதும் காந்தி

கொருவேடத்துடன் வந்து கொண்டுள்ளனர்! இவர்களை எதிர்க்கக் கழகம் தயாரிப்புகள் செய்வதில் தவறில்லை. அரசியல் தற்குறிகள் கூட இதிலே தடுமாறவழியில்லை — ஆனால் ஆயுட் கைதிகள் ஆட்டம் போட்டுக் குலைக்கின்றனர்.

இந்தியாவின் இரண்டாவது பெரிய கட்சிக்காரர்கள் இண்டஸ்கித் தோழர்கள், முன்னேற்றக் கழகத்தை எப்படி எதிர்த்

செங்கொடித் துணியால்

யாரின் தத்துவங்களைக் காட்டியதில்லை. அந்த மாடுகளின் சாணத்தைச் செங் கொடியிலே கொட்டி மூட்டையாகக் கட்டிச் சுமக்கும் தண்டங்கள் எப்போதும் கழகத்தைக் களத்திலே தனியாகச் சந்திக்க வந்ததில்லை.

நான்குனேரி— போடி— திருவண்ணாமலை என வளர்ந்திருக்கும் இடைத் தேர்தல்களில் காளைகள் கதிரவனைக் காண வருகின்றன.

தார்கள் என்பதை அவர்களின் செத்துப்போன செயலாளர் ஒருவர் எழுதிவைத்திருக்கிறார். அப்போது சிறைக்கம்பிகளை எண்ணிக்கொண்டிருந்த ‘பொள்ளாச்சிப் பையன்கள்’ இப்போதும் பார்க்கலாம்!

ஐம்பது இடங்களில் வெற்றி பெற்றவர்களை வங்கக்கடலில் தூக்கியெறியப் போவதாக மனைவிகள்மீது சபதம் எடுத்துக் கொண்ட சதிவழக்குச் சண்டியர்கள், மூன்றாவது பொதுத்

யின் கண்ணியத்தைக் காக்க விரும்பினால் கழகத்தை களத்திலே சந்திக்கலாம்! நாங்குனேரியில் உன்னைக் காப்பாற்றினேன் — திருவண்ணாமலையில் என்னைக் காப்பாற்று எனக் கேட்டிருக்கலாம்!

செங்கொடியாலே செங்கதிரோனை மறைத்திட முடியும் என்ற மண்டைக்கனம் இருந்திருந்தால் கொள்ளைக்கார கட்சி தன்னுடைய வேட்பாளரைக் காட்டியிருக்கலாம்! காளை மாட்டு வாலுக்கு எண்ணை போடும் பெரிய வேலையைப் பொறுப்போடு ஏற்றுக் கொள்ளும்படி எப்போதோ சொல்லி விட்டார் டாங்கேத் தலைவர்! அதனைக் காட்டித்தான் கந்தசாமி தன் கண்ணசைவிற்கு முன்பாகவே காமராசருடைய காலடியில் வீழ்ந்துவிட்டார்கள்! இந்தச் சரணாகதிக்குப் பின்னாலே மறைந்திருக்கும் பெரிய உண்மை ப. உ. ச. அவர்களை எதிர்க்கும் அருகதை அரிவாள் சம்மட்டிகளுக்கு அன்றுமில்லை இன்றுமில்லை என்பதாகும். அத

செங்கதிரோனை மறைக்க முடியாது!

துணைக்கண்டத்தின் எல்லாப் பகுதியிலும் கழகத்தின் கருத்துச் செய்திகள் காலடிச் சுவடுகளாகப் பதிந்து விட்டன.

பாராளுமன்றத்திலிருந்து பள்ளிகள்வரை, பட்டம் பெற்றோர் முதல் பாமரர் இறுதியாக கழகத்தின் வழி நடக்கின்றனர் — வாழ்த்துக்களையும் தருகின்றனர்.

ஏசல்குப்பைகளைக் கொண்டு தங்கக் கலசம் மறைந்திட மேக்கப் பேர்வழிகள் போதையிலே பொழிந்த பிறகும், பையன்கள் சண்டித்தனத்

வாடையைத் தடுக்க ஆயத்தமாகுங்கள்!

“வட நாட்டு வாடையைத் தடுத்து நின்றனர் நம் மறைமலை யடிகள். அந்த வடநாட்டு வாடை தமிழ்நாட்டில் புக முடியா வண்ணம் வேங்கடமலை தடுத்து; தணிகைமலை தடுத்தது. அவற்றையும் கடந்து உள்ளே நுழைந்த வாடையை மறைமலை தடுத்தது. வடக்கிலிருந்து வருகின்ற வாடையை வந்த வழி ஓட்டுதல் வேண்டும். அதற்குத் தமிழர்கள் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

—ரா. பி. சேதுப்பிள்ளை

எங்கெங்கோ எப்படி எப்படியோ பெற்றபரிசுகளைப.உ. சண்முகம் போட்டியில் எப்படியும் எதையும் செய்திடலாம் என்ற துணிவும் வந்து விட்டது. அதனால்தான் துவக்க விழாவே கல்வீச்சில் உள்ளது. காங்கிரசுக் கட்சியின் கருணைக்காகத் தினமும் காதல் கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கும் கழுத்தறுப்புக் கட்சியினர் கழகத்தின் செயல் முறைகளைக் கண்டு காபோதி இசைக்கின்றனர்.

வேலூர் சிறையில் அடைபட்டிருக்கும் ஐந்தாம் படைத் தலைவர்கள் தி.மு.க.வின் திறனறிவார்கள்! ஆனால் திருட்டுவேலை செய்து விட்டுத் தியாகிகள் ஆன கழுத்தறுப்பு வீரர்கள் ‘திருவண்ணாமலைத் தயாரிப்புகள்’ ஏன் என எழுதுவதும் ஏசுவதுமாக இருக்கிறார்கள்!

நாங்குனேரி— போடியைவிட எத்தனையோ மடங்கு அதிகமாக முன்னேற்றக் கழகம் முதலிடம் தர வேண்டியது அந்தத் தொகுதிதான்!

காங்கிரசுக் கட்சி யல்ல — காமராசருடைய சர்க்கார் நிறுத்தியிருக்கும் வேட்பாளர் மாடுகளின் பின்னாலே வருகிறார். மந்திரி பட்டாளங்கள் ஆளுக்

தேர்தலுக்குப்பின்னால் ‘கும்பகோணம் கோணங்கிகள்’ கௌன்சிலுக்கு எப்படி அறிக்கை தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையாவது புரிந்துகொள்ளவேண்டும்!

சந்தா வாங்கிச் சோறு தின்பவர்களுக்கு வெங்கட்டராமன், ராமமூர்த்தி, கந்தசாமி, சிவானந்தம் ஆகியோர் கழகத்தவரைப்பற்றிச் சொல்லியிருக்கும் கடுமையான உண்மைகள் கருத்து விளக்கமாக அமையக் கூடும்!

தி. மு. க.வை எதிர்க்கத் திறமையற்றவர்கள், ‘நான் இல்லாத நேரத்தில் வெற்றி பெற்றார்கள்’ என்று ஆமதாபாத்திலே போய்க்கூட ஆட்டம் போட்டவர்கள் திருச்செங்கோட்டுத் தேர்தலிலே கட்சியின் மான உணர்ச்சியுடன் போட்டியிடவில்லை. கழகத்தின் வலிவும் கந்தப்பன் வெற்றியும் கழுத்தறுப்புத் தொண்டர்களுக்குத் தெரியும்--கருணையாற்று வீரர்களுக்கு இப்போதும் புரியவில்லை!

காளைமாடுகளைக் காப்பாற்றத் துடிக்கும் கதிர் அரிவாள்கள் காமராசரைத் தாங்கி நிற்கும் கந்தசாமிகள், தங்களது கட்சி

னால்தான் சகதிப் பத்திரிகை சங்கடப்படுகிறது.

காங்கிரசுக்கட்சி கழுத்தறுப்புக் கட்சியைத் தீர்மானம் போட்டுஅழைக்கவில்லைஅழைக்காமலே அந்தப்புரத்து அடிமைகளாகிவிட்டவர்கள் செங்கொடிச் செம்மல்களே! கந்தசாமிகள் பெற்ற கைக்கூலி பதினெட்டுப் பேர் விடுதலை! மூக்கானந்தங்கள் மந்தித் தோப்பு

(11-ம் பக்கம் பார்க்க)

அன்றைய பெரியாரின் அறைகூவல்

தன்மானத் திராவிடர்காள்! தமிழர்காள்! இந்தித் திணிப்பை எதிர்த்து வெற்றி காணப் போராட்டத்தில்ஈடுபடமுன் வாருங்கள்! யார் எந்தக் கட்சியில் இருந்தாலும் தன் மானமிருந்தால் இந்தியை எதிர்க்க முன் வாருங்கள். “சாவேன் அல்லதுவெற்றியோடு மீள்வேன்” என்ற உறுதியோடு முன் வாருங்கள். போராட்டத்தில் வெற்றிக்காக ஒழிந்து படவும் தயாராக முடிவுசெய்து கொண்டு முன் வாருங்கள். அப்போது வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

17-7-48 சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில்.



மலர் 1 | 23-6-63 | இதழ் 32

திருவண்ணுமலைத் தொகுதி வாக்காளர்களே !

ப. உ. சண்முகத்திற்கு வெற்றிமாலை சூட்டுவீர்!

திருவண்ணுமலை இடைத்தேர்தல் இம்மாதம் 29-ந் தேதி நடைபெற இருக்கிறது.

தி. மு. கழகத்திற்கும்—காங்கிரஸ் கட்சிக்கும் நேரடிப் போட்டி.

தன்மான உணர்வுகொண்ட கவரிமானும்—இரத்தவெறி கொண்ட வேங்கைப்புலியும் தேர்தல் களத்தில் சந்திக்கின்றன.

வேங்கைப்புலி வெல்லுமா? கவரிமான் களத்திலே வெற்றி பெறுமா? என்பதல்ல பிரச்சினை—வேங்கைப்புலி வீழ்த்தப்பட வேண்டும். இரத்தவெறி கொண்ட அதன் சொரசொரத்த நாக்குகள் அறுத்தெறியப்பட வேண்டும். நாங்குனேரியிலும்—போடியிலும் வாகை சூடினேன் என்று வாலடித்து வரும் வேங்கைக்கு திருவண்ணுமலையிலே கல்லறை கட்டியாக வேண்டும்.

திறம்கொண்ட திருவண்ணுமலை வாக்காளர்கள் காங்கிரஸ் வேங்கையை வீழ்த்தி-கழகக் கவரிமானும் ப. உ. சண்முகத்தைத் தேர்ந்தெடுக்கும்படி இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

இந்தியத் துணைக்கண்டத்தை கம்யூனிஸ்ட் சீனனுக்குக் காட்டிக் கொடுத்துப் பதவிச் சுகம்பெற இருந்த தேசத் துரோகிகளான கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்க முன் வந்திருக்கிறார்கள்!

எவ்வளவுதூரம் தி. மு. கழகத்தை கம்யூனிஸ்டுகள் கடுமையாக எதிர்க்கின்றார்களோ அந்த அளவுக்கு சலுகைகள் வழங்கப்படும் என்று காமராசர் உறுதிமொழி கொடுத்திருக்கிறாராம்.

போடியிலும்—நாங்குனேரியிலும் கம்யூனிஸ்டுகள் நடந்து கொண்ட விதம் காமராசருக்கு மன நிறைவு அளித்திருக்கிறதாம்.

இந்த இரண்டு இடைத் தேர்தல்களுக் கிடையில் சில கம்யூனிஸ்ட் கைதிகள் விடுதலை செய்யப்பட்டதற்குக் காரணம் காமராசரின் கண்ஜாடை என்று கூறப்படுகிறது.

காமராசரின் பரிபூரண அன்பைப் பெற்று இன்னும் சிறையிருக்கும் சில தேசத் துரோகக் கைதிகளை வெளியே இழுத்துக் கொள்ளுவதற்குத்தான் கம்யூனிஸ்ட் கட்[illegible] திருவண்ணுமலைத் தேர்தல் நிதியே திரட்டுகிறது.

இந்தியக் கம்யூனிஸ்டுகளில்—சூடு, சொரணை, மானம், வெட்கம் இவைகளை அடியோடு இழந்த கம்யூனிஸ்டுகள் யார் என்று சலித்தெடுத்துப் பார்ப்போமானால் அவர்கள் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகள்தான்.

1957-ல் கேரளாவில் ஜனநாயக வழிப்படி முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நம்பூதிரிபாத் தலைமையில் ஆட்சி செய்து கொண்டிருந்ததுதான் கம்யூனிஸ்ட் கட்சி—ஒரு மாற்றுக் கட்சி, ஜனநாயக வழியில் அரசியல் அந்தஸ்துப் பெற்றிருப்பதைக் கூடக் காணச் சகியாத காங்கிரசுப் பெரிய மனிதர்கள்—கேரளாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியைக் கவிழ்த்துவிடத் திட்டமிட்டார்கள்! அதன்மீது வீண்பழி சுமத்தினார்கள். மக்களைத் தூண்டிவிட்டார்கள், உள்நாட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள்—நாடு முழுவதுமே கேரளாவில் நடக்கும் கம்யூனிஸ்ட் ஆட்சியை விரும்பவில்லை என்பது போல்—மன்னத் பத்மநபன் என்பவர் தலைமையில் ஊர்வலம் நடத்தி ஆர்ப்பாட்டம் செய்து— தேர்தல் மூலமாக ஜனநாயக வழியில் அமைக்கப்பட்ட மக்களாட்சியை—அவர்கள் கம்யூனிஸ்டுகள் என்பதற்காக பலவந்தமாகக் கீழே இறக்கிவிட்டு-காங்கிரஸ்காரர்கள் முடிசூட்டிக் கொண்டார்கள்.

இது பண்டித நேரு உட்பட உலகறியச் செய்த ஜனநாயகக் கொலை.

காட்டுமிராண்டிகள் தர்பாரில்கூட நடக்கக்கூடாததை—நடக்க முடியாததை வாய்கிழிய ஜனநாயகம் பேசும் காங்கிரஸ்காரர்கள் செய்து காட்டினார்கள் கேரளாவில்.

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளே! உங்களுக்குச் சூடு, சொரணை, மானம், வெட்கம் மருந்துக்காவது இருக்குமானால் உங்களைப் பழிதீர்த்துக் கொண்ட காங்கிரஸ் கட்சிக்குப் படுதா விரித்துக் கொண்டு திரிவீர்களா?

அறவழிப்படி ஆட்சிபீடத்திலமர்ந்த கம்யூனிஸ்ட் கட்சியை ஓங்கி உதைத்துத் தள்ளினான் காங்கிரஸ்காரன். அந்த உதைத்த காலுக்கு நீ, திருவண்ணுமலை வரை சென்று முத்தம் கொடுக்கிறாயே—சீச்சீ நீ, உண்மையான கம்யூனிஸ்டில்லை. நீ, ஒழுங்கான தமிழ் மகனில்லை! நீ, ஒரு கோழை! நீ, ஒரு அடிமை! நீ, ஒரு எடுபிடி! நீ, ஒரு கைக் கூலி!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேரளாவில் முதன் முதலில் பெற்றெடுத்த வெற்றிக் குழந்தையை—ஜனநாயகச் சிசுவை காங்கிரஸ்காரன் கழுத்தை முறித்துக் கொன்று போட்டுவிட்டான் பாவி! அந்தக் கொலைக் கரத்திற்குக் காப்புச் செய்துபோட திருவண்ணுமலை ஓடுகிறாயே நீயா லெனின் வாரிசு? நீயா காரல்மார்க்கஸின் வழித்தோன்றல்? நீயா குருசாவின் குடும்பத்தைச் சார்ந்தவன்? வெட்கமடா வெட்கம்!

மகன் செத்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலி அறுக்க வேண்டும்—இதுதானு தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் தலையாய கொள்கை!

தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு சில தலைகள் சிறைக்கூடத்திற்குள்ளிருந்து விரைவாக வெளிவர வேண்டும் என்பதற்காகவா இந்த வெட்கங்கெட்ட தோழமை?

தேர்தல் குறுக்கு வழித் தயாரிப்புகளில் அசகாயசூரர் என்று பெயர் பெற்ற காமராசர் திருவண்ணுமலையில் முகாமடித்துக் கொண்டிருக்கிறார்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு பஸ் முதலாளிகளிடத்தில் ஓட்டுக்கு விலை கொடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாம். அதற்குக் கைமாருக அவர்களுக்குப் புதிய பஸ் ரூட்டுகள் வழங்கப்படுமாம்.

தூயஉள்ளம் கொண்ட கிராம மக்களே! காமராசரின் படை பட்டாளங்கள் உங்களிடம் கற்பூரத்தைக் காட்டி சத்தியம் வாங்க வரலாம்—பச்சை நோட்டுகளுக்கு உங்கள் வாக்குரிமையை விலை பேசலாம்—அதிகாரிகளைக் கொண்டு மிரட்டலாம்—காமராசருக்குத் தெரிந்த தேர்தல் தில்லுமுல்லுகள் அத்தனையும் கட்டவிழ்த்து விடப்படலாம்—எதற்கும் அஞ்சாதீர்கள்!

ஆட்சி எப்பொழுதும் அவர்கள் கரங்களிலேயே இருக்கப் போவதில்லை!

அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல் திருவண்ணுமலையில் நடக்கும் தேர்தல்-''வரி வாங்குவோருக்கும்—வரி கொடுப்போருக்கும் நடக்கும் தேர்தல்''—இதில் வரி வாங்குவோர் கையைப் பலப்படுத்தினுல் மேலும் நாம் எழுந்திருக்க முடியாத சுமைதான் நம்மீது வந்துவிழும்.

திருவண்ணுமலைத் தேர்தலில் காமராசருக்கு வெற்றிமாலை விழுமேயானுல் இந்தித் திணிப்புக்கு இறுதி வெற்றி என்ற முத்திரை குத்தப்படும்!

ஆகையால் நாட்டுக்காக, மொழிக்காக, இனத்துக்காக, உங்களுக்குக்காகப் பாடுபடும் தி. மு. கழகத்தை வெற்றிபெறச் செய்யுங்கள்.

உங்கள் உரிமைகளுக்காக வாதாடும் வல்லமை பெற்ற ப. உ. சண்முகத்திற்கே வெற்றிமாலை சூட்டுங்கள்!

நீங்கள் தி. மு. கழகத்திற்குத் தருகின்ற பேராதரவு காமராசருக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் பேரிடியாக ஒலிக்கவேண்டும்.

தி. மு. கழகத்தை வெற்றிபெறச் செய்தார்கள் திருவண்ணுமலைத் தொகுதி மக்கள், என்ற மகிழ்ச்சிச் செய்தியை செவி குளிரக் கேட்கத்தான், நாடு ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறது.

மறந்து விடாதீர்கள்!
உங்கள் குடும்பக் கட்சி தி. மு. க.
உங்கள் குடும்பத்துப் பிள்ளை ப. உ. ச.
உங்கள் குடும்ப விளக்கு உதய சூரியன்.

—தினகரன்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓங்கி அடித்தபிறகு - தேசிய ஒருமைப்பாட்டுப் பஜனை செய்வதும் தேசப்பற்று என்னும் பல்லவியை வீதியெல்லாம் முழங்குவதும் எதிர்பார்க்கின்ற பலனைத் தராது. எதிரியை விரட்டுவதற்காக மட்டும் உருவாக்கப்படும் தேசப்பற்று காகிதப் பூவிற்குச் சமமானது. அதில் இயற்கை மணம் எந்தக் காலத்திலும் ஏற்படாது.

திரைப்படக் கொட்டகைகளில் ஜனகனமன கீதம் இசைக்கப்படுவதினாலே மட்டும் ஒருமைப் பாட்டுணர்ச்சி வளர்ந்துவிடுமா?

திரைப்படப் பிரச்சாரத்தின் மூலம் ஒரு கொள்கையை மக்கள் மனதில் பதிய வைக்க முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? காங்கிரஸ்காரர்களே நெஞ்சில் கைவைத்துச் சொல்லுங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை சமுதாய சீர்திருத்தக் கருத்தை அரசியல்குறைபாடுகளை திரைப்படத்தில் புகுத்தி பிரச்சாரம் செய்யத் தொடங்கிய நேரத்தில் என்ன சொன்னீர்கள்? எப்படியெல்லாம் கேலி செய்தீர்கள்? "சினிமாவில் காட்டிவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடுமா? நாடகம், சினிமாவில் பிரசாரம் செய்தால் திராவிட நாடு கிடைத்துவிடுமா? அட, சினிமாக் கட்சிக்காரர்களே! நீங்கள் கதை வசனம் எழுதத்தான் லாயக்கு—அரசியலுக்கும் உங்களுக்கும் வெகுதூரம்"—என்றெல்லாம் கேலி செய்தீர்களே; கண்டனக் கணை தொடுத்தீர்களே! இப்பொழுது நாங்கள் கையாண்ட அதே திரைப்படப் பிரச்சார முறையை நீங்கள் பின்பற்றுகிறீர்களே வெட்கமில்லையா?

பண்டிதர் சுற்றுப்பயணமா? அதற்கு ஒரு சினிமா. ஐந்தாண்டுத் திட்டப்பிரச்சாரமா? அதற்கொரு சினிமா. தங்கக் கட்டுப்பாடா? அதற்கொரு சினிமா வரிவிதிப்பா? மொழித் திணிப்பா? தேர்தலா? தேசப் பாதுகாப்பா? எதற்கெடுத்தாலும் சினிமா மூலம் பிரச்சாரம்.

இதே வேலையை எதிர்க்கட்சிக்காரன் செய்தால் அது பைத்தியக்காரத்தனம்—அவன் சினிமாக் காட்சிக்காரன். இதே பட்டத்தை இப்பொழுது காங்கிரஸ்காரர்களுக்குச் சூட்டுவதில் என்ன தவறு?

திரைப்படக் கொட்டகைகளில் தேசிய கீதம் ஒலிபரப்பும் பிரச்சாரத்தைஇத்தனை ஆண்டுகளாக ஏன் செய்யவில்லை? 'தேசபக்திக்கு' அப்படியென்ன திடீர்த் தலைவலி வந்துவிட்டது?

சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து முறையான தேசபக்தியை உருவாக்க காங்கிரஸ்காரர்கள் தவறிவிட்டனர். பணக்காரர்களுக்கு வாழ்வளிப்பதிலேயும், பதவிக்காகக் குடுமிபிடிச் சண்டை போடுவதிலேயும் தீவிர கவனம் செலுத்தினார்களே தவிர, மக்களைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

பெற்ற சுதந்திரம் சில குடும்பங்களின் உரிமைச் சாசனமாக மாறிவிட்டதைக் கண்டு பொது மக்களும் காங்கிரஸ் கட்சியை வெறுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். தேசிய ஒருமைப்பாடு எனும் போலிக் கூக்குரலுக்கு செவிகொடுக்க அவர்கள் தயாராய் இல்லை. ஏதோ ஒரு ஆதிக்கம் தங்கள் மீது திணிக்கப்படுவதாக அஞ்சுகிறார்கள். படையெடுத்து வருவதாகப் பயப்படுகிறார்கள். வெறுப்பு வளரத் தொடங்கியிருக்கிறது. இந்த நேரத்தில் தேச பக்தியையும்—தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்க்க டெல்லி சர்க்கார் பல முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். அந்தப் பல முறைகளில் ஒன்றுதான் திரைப்பட அரங்குகளில் 'ஜன கன மன' என்ற தேசியகீதத்தை ஒலிபரப்புவது.

மக்கள் தேசியகீதத்திற்கு செவி கொடுக்கிறார்களா என்றால் இல்லை! பார்க்க வந்த படம் முடிந்ததும் கண்ணைக் கசக்கியபடி வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளித் திரையில் தேசிய கீதம் ஒலித்துக்கொண்டிருக்கிறது. யாரும் மௌனமாய் நின்று மரியாதை செலுத்தக் காணோம். மெத்தப் பரிதாபமான நிலையில் தேசிய கீதம் முடிவடைகிறது.

ஒருவர்கூட மரியாதை செலுத்தவில்லையா? — என்றால் இரண்டு மூன்று பேர் மௌனமாய் நிற்கிறார்கள், அவர்கள் யார் என்று கவனித்தால்—எரிகின்ற மின்விளக்கினையும், ஓடுகின்ற மின்சார விசிறியையும் நிறுத்திவிட்டு, கதவை மூடுவதற்காகக் காத்திருக்கும் தியேட்டரின் பணியாட்கள்.

திரைப்பட அரங்குகளில் தேசிய கீதத்தை ஒலிபரப்புவதின் மூலம்—தேச பக்தியையோ, தேசிய ஒருமைப்பாட்டையோ உருவாக்கி விடலாம் என்று எண்ணுவது பகற்கனவாக முடியும்.

மசூதியில் 'குரா'னின் பொன்மொழிகளுக்கு தரப்படுகின்ற மரியாதை—'சர்ச்'சில் பைபிளின் வாசகங்களுக்கு ஏற்படுகின்ற புனிதத்தன்மை—ஒலிக்கப்படும் தேகிய கீதத்திற்கும் உண்டாகவேண்டும். மாறாக—திரைப்பட அரங்குகளில் அது ஒலிபரப்பப்படுவதால் தேசிய கீதத்தின் புனிதத்தன்மை கெடுகிறது—களங்கம் சேர்கிறது—உங்கள் நோக்கமும் பூர்த்தி பெறவில்லை என்பதை அரசினர்க்கு அறிவுறுத்த விரும்புகிறோம்.

இந்தியா? ஆங்கிலமா?

— கதா —

எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தி, தென்னக மக்கள்மீது திணிக்கப்படக் கூடாதென்பதை இன்று பெரும்பாலோர் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்தி ஆட்சிமொழியாவதை நாம் ஏற்றுக்கொண்டால், நமது தாய்மொழியான தமிழின் வளம் குன்றும்; தமிழர்கள் வாழ்வு தட்டிப் பறிக்கப்படும் என்கிறோம் நாம்.

ஆனால் நாட்டில் சில புல்லுருவிகள் இருந்துகொண்டு, தங்கள் அடிமைப் புத்தியை விடாது, இந்திக்கு ஆலவட்டம் சுற்றுகிறார்கள்.

இந்தி கூடாது என்று மக்கள் மன்றத்திலே பொதுவான கருத்து இருந்து வருவதோடு, அது விரைவில் கிளர்ச்சி வடிவம் பூண்டு ஆட்சிமொழி என அறிவிக்கப்பட்ட இந்திக்குச் சமாதி கட்டும் நிலையில் உருவாகி வருகிறது.

இந்நிலையில்இங்குள்ள ஏகாதிபத்திய எடுபிடிகள் தங்கள் எண்ணத்தை அதாவது இந்தி தேவைதான் என்ற கருத்தை நேரடியாகக் கூற அஞ்சி மறைமுகமாக அக்கருத்தை தெரிவிக்கிறார்கள்.

இந்தி ஆட்சிமொழியாவது தென்னகத்துக்கு—தமிழ் நாட்டிற்கு நன்மையா? அல்லது தீமையா? இதை எடுத்துக் கூறும் துணிவு இந்தி தாசர்களுக்கு இல்லை.

அதைக்கூற அஞ்சும் பேடிகள் குக்கல் குலைப்பதுபோல இந்தியால் ஏற்படவிருக்கும் ஆபத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூறி, போராட்டக் களம் காணும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நம்மைப் பார்த்து "ஆங்கிலத்துக்கு வால் பிடிக்கிறார்கள்" என்று கூறுகிறார்கள்.

வால்பிடிக்கும் வழக்கமோ? தாள் கிடக்கும் பழக்கமோ கழகத்தைச் சேர்ந்த எவருக்கும் என்றைக்கும் இருந்ததில்லை.

பதவி தேடி அலையவோ, பர்மிட்டுக்காக காத்திருக்கவோ, லைசன்ஸ் வேண்டி தவமிருக்கவோ நாங்கள் தயாரில்லை!

எங்களுக்குள்ள கவலையெல்லாம் வடவர் தா[illegible]ந்து, தென்னக மக்களின் உரிமைகள் அனைத்தையும் அவர்கள் பாதார விந்தங்களில் சமர்ப்பித்துவிட்டு இங்கு வந்து வீராப்புபேசும்போலிவேடதாரிகள் திருந்தவேண்டும் என்பதுதான்!

தமிழ் எனும் பெயரைக் கூறிக் கொண்டு தமிழுக்கே துரோகம் விளைவிக்கும் அஞ்ஞானக் கூட்டங்கள் தாயகத்திற்கு வந்திருக்கும் கெடுதலை உணர்ந்து போராடத் தயாராக வேண்டுமென்பதுதான்.

ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்று கழகம் கூறுவது ஆங்கிலத்தின்மீதுள்ள மோகத்தால் அல்ல; இந்தி அறவே கூடாது என்றால் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்றுதானே கூற வேண்டும்.

இந்தி கூடாது; தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்குக என்று கூறலாமே-என்று மெய்ஞானம் பெற்றவர்கள் உபதேசிக்கலாம்.

அனைத்திந்தியாவிலும் தமிழ் ஆட்சிமொழியாவது குறித்து வெற்றுத் தோட்டாக்கள் பெறும் மகிழ்ச்சியைவிட நாம் பன்மடங்கு மகிழ்ச்சி பெறுவோம். சந்தேகமில்லை.

ஆனால், எந்த ஒரு காரணத்திற்காக நாம் இந்தி தேவையில்லை என்று வாதாடுகிறோமோ, அதே வாதத்தை வேறு பல மாநிலங்கள் எடுத்து வைத்து மறுக்கும்.

ஆங்கிலத்தை விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில அஞ்ஞானங்களைத் தவிர வேறு எவரும் மறுக்கமாட்டார்கள்.

ஆங்கிலத்தின் பயனால் அகில உலகமும் பல நன்மைகளைப் பெற்றிருக்கின்றது. இன்று பல நாடுகளில் அது ஆட்சிமொழியாகவும் இருந்து வருகிறது.

அதுபோலவே நம்நாட்டிலும் தொடர்ந்து ஆட்சிமொழியாவதால் கேடொன்றும் இல்லை. ஆங்கிலம் அகற்றப்பட்டு, இந்தியும் நீக்கப்பட்டு, தமிழே ஆட்சிமொழியாக கிளர்ச்சி செய்வோம் வாரீர் என அழைப்பு விடுத்தால் தி. மு. கழகம் மட்டுமல்ல—தமிழக மக்களே அதற்குத் தயாராவர் என்பது திண்ணம்.

அதைவிடுத்து ஆங்கிலத்திற்கு வால் பிடிப்பதாக எங்களைப் பார்த்து உறுமுவது பெருமைக்குரிய செயலல்ல!

ஆங்கிலம் ஆட்சிமொழியாக தொடர்ந்து நீடிப்பதால், நாட்டுக்கு நம் மொழிக்கு நன்மையிருக்கிறது என்பதற்கு ஓராயிரம் காரணங்களை காட்டமுடியும்? இல்லை அதனால் தீமையாவது இல்லையென்று திட்டவட்டமாகக் கூறமுடியும்.

இந்தியாவில் தென்னாட்டிற்கு குறிப்பாக தமிழகத்திற்கு நன்மைஏற்படும்என்றுஏகடியம் பேசுவோர் விளக்கிக் கூறுவார்களா?

தமிழ்-இந்தியால் பாதிக்கப்படாது இந்தியால் தமிழ் வளரும் என்று கூறமுடியுமா? என்று தென்னக மக்கள் சார்மாக கேட்கிறோம்.

பதில் கூறுவார்களா?



லால்குடித் தொகுதி

எங்கள் எம். எல். ஏ.

அன்பில் தர்மலிங்கம்

1962-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் லால்குடி தொகுதியில் தி. மு. கழகத்தின் சார்பில் போட்டியிட்டு காங்கிரசுக் கட்சியின் அதிகார பலத்தையும், பண பலத்தையும் முறியடித்து எண்ணாயிரம் வாக்குகள் அதிகம் பெற்று தேர்தலில் வெற்றிபெற்று தற்போது தி. மு. கழகத்தின் கொறடாவாகவும், திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளராகவும் இருந்துகொண்டு தொகுதி மக்களுக்கும், சார்ந்து இருக்கின்ற கழகத்திற்கும் நல்ல முறையிய் பணி புரிந்து வரும் அன்பில் தர்மலிங்சம் அவர்களே எங்கள் சட்ட மன்ற உறுப்பினராவார்.

எங்கள் சட்ட மன்ற உறுப்பினர், 'திராவிட நாடு திராவிடருக்கு ஆக வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தைக் கடைப்பிடித்து வருபவர். இந்த இலட்சியத்தை லால்குடி தொகுதி மக்களுக்கு நல்ல முறையில் விளக்கி அவர்களையெல்லாம் தன் இலட்சியத்தின் பால் ஈர்த்து வைத்து இருப்பவர். அன்பும், அறிவும், ஆற்றலும் உடையவர். சாதாரண ஏழைக்குடியில் பிறந்தவர். அதனால்தான் ஏழைமக்களின் இன்னலை நன்கு புரிந்து வைத்திருப்பவர். விவசாய மக்களின் வேதனையைப் புரிந்தவர். ஏழை, எளியவர்களின் வாழ்வுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்தவர். தனக்கென வாழாதவர். பிறருக்குத் தொண்டு புரிவதே தனது கடமையெனக் கொண்டவர். அன்பிற்கு உறைவிடமானவர். ஆற்றலுக்கு இருப்பிடமானவர்; எதிரிகளுக்கும் இரக்கங்காட்டி இன்மொழி பேசித் துணைபுரிபவர். உழவர்களின் ஊழியன். ஏழை, எளியவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இன்னல் இழைக்கப்படுகின்ற நேரத்தில் ஓடோடி வந்து துணைபுரிகின்ற உத்தமர். இவரைக் காணச் செல்லுகின்ற நேரத்தில் சிரித்த முகத்துடன் காட்சியளிப்பார். சோர்ந்த முகத்தோடுச் செல்லுகின்றவர்கள் இவரைக் கண்டு உரையாற்றி விட்டு வந்தால் புதிய உணர்வையும், புதிய தெளிவையும் பெறுவார்கள். எங்கள் சட்டமன்ற உறுப்பினர் மாற்றுக் கட்சித் தோழர்களுடன் நெருங்கிப் பழகுவார். இதைக் கூட ஒரு சிலர் தவறாகக் கருதக் கூடும். ஆனால் அவர்களே வியந்து பாராட்டிப் போற்றும் அளவுக்கு அவர்களையே தம்பால் இழுக்கும் சக்தி படைத்தவர்.

62-ம் ஆண்டு நடைபெற்றத் தேர்தல் நேரத்தில் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் காங்கிரசுக்காக தேர்தல் பிரசாரம் செய்ய வந்தபோது அன்பில் தர்மலிங்கம் அவர்களைப்பற்றி ஒரு கூட்டத்தில் பேசினார்—அன்பில் தர்மலிங்கம் நல்ல பண்பு படைத்தவர்; மிக நல்லவர்; இப்படிப்பட்ட அரசியல் பண்பு படைத்தவர்கள்தான் நாட்டுக்குத் தேவை" யென்று அழுத்தமாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

அன்பில் தர்மலிங்கம் அவர்கள் 57-ம் ஆண்டு தேர்தலிலே வெற்றிபெற வேண்டியவர். வெற்றி பெறாவிட்டாலும் அவர் ஏழை எளியவர்களுக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும், உழைப்பாளத் தோழர்களுக்கும் நல்ல முறையில் போராடி வெற்றியைத் தேடிக் கொடுத்து இருக்கின்றார். மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சங்கம் நடத்திய S.M.T. பஸ் போராட்டம், புதுக்கோட்டை சுதர்சன் ராஜாமணி தொழிலாளர் போராட்டம், திருச்சி பீடி, சுருட்டுத்தொழிலாளர்போராட்டம், வடபாதிமங்கலம் தியாகேசர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் போராட்டம், டால்மியா சிமிண்ட் தொழிலாளர் போராட்டம், வாரத் தொழிலாளர் அறப்போர் போன்ற போராட்டங்களையும், விவசாயிகளுக்காகச சிறப்பாகக் குறிப்பாகக் குறிப்பிட வேண்டிய நங்மவரம் போராட்டத்தையும் குறிப்பிடலாம். இதுபோல் ஆற்றியத் தொண்டுகள் பலப் பல.

சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த காலத்திற்குள் ஆற்றிய—ஆற்றிக்கொண்டு இருக்கின்றப் பணிகள் ஏராளம். சட்டமன்றத்தில் லால்குடி தொகுதி என்று ஒரு தொகுதி இருக்கிறது என்பதே இவர் போன பின்புதான் நன்கு தெரிய வந்தது. இந்த இடைப்பட்டக் காலத்தில் பல முறை எங்கள் தொகுகளில் இருக்கும் ஊர்களுக்கு வந்து மக்களின் குறைகளை நேரில் கண்டறிந்து இருக்கின்றார். ஏராளமான பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு இருக்கின்றார். கழகக் கூட்டங்களுக்கு இவர் அனுமதி இல்லாமல் விளம்பரம் செய்த போதிலும், விளம்பரத்தாள் மட்டும்—அனுப்பினால் குறித்தகாலத்திற்குள் வந்துவிடுவார். எங்கெங்கே இன்னல் தலைகாட்டுகிறதோ அங்கெல்லாம் இவர் காட்சியளிப்பார். லால்குடி தொகுதியில் இவர் ஆற்றிக் கொண்டு இருக்கின்ற பணிகளால் திராவிட முன்னேற்றக் கழகம் மேன்மேலும் வளர்ந்து, மற்ற கட்சிகள் தேய்ந்தும் வருகின்றன.

இவ்வளவு அன்பும் ஆற்றலும், ஆண்மையும், துணிவும், நல்ல உள்ளமும், நல்ல எண்ணமும், தொண்டாற்றும் உள்ளமும், இலட்சியத்திற்காக எதையும் தாங்கும் இதயமும், மாற்றாரே பாராட்டும் சீரிய பண்புகளும்—இதுபோன்ற பலவகையான இயல்புகளையும் கொண்டு நன்கு செயலாற்றி வருகின்ற செயல் வீரரை நாங்கள் சட்டமன்ற உறுப்பினராகப் பெற்றதைப் பெரும் பேறெனக் கருதுகின்றோம்.

வாழ்க எங்கள் சட்டமன்ற உறுப்பினர்! வெல்க அவரது இலட்சியம்!

—ஜி. தியாகராசன், பூவாளூர்.



போராட்டக் குழுத்தலைவா புறப்பட்டேன் உன்னோடு !

புறப் பாட்டுப் பாடுகின்ற சிங்கம் நீ !
போருக்கு அஞ்சாத வரிப் புலி நீ,
திறம் கொண்ட பெரும் படையின் இளையோன் உன்னை
தேரோட்டும் சாரதியாய்த் தேர்ந்தெடுத்தார்!

எடுத்த பணி முடிக்கும் வரை இமை எங்கு மூடும்!
கொடுத்த பணி வெற்றிக்கே குருதி எல்லாம் ஓடும்!
அடி மரத்தைப் போன்றவனே உறுதியோடு
படை நடத்தி அண்ணன் கை வாகை சூடு!

கல்லக் குடி சேதி கேட்ட போதே
உள்ளக் குடியில் உன் உருவம் கண்டேன் !
மெல்லக் குடியேறி நின்ற உன்னை
மெய்யோடு உயிராக இணைத்துக் கொண்டேன்.

களத்திலே உனக்கேது தனியான சாவு?
கையோடு நான்வருவேன் களப்பங்கு கேட்பேன்!
மெய்யோடு இணைந்தவனே மெய்யான உறுதி!
உன்னோடு என்னுயிரும் களத்தில் வீழும்!

—தினகரன்

வாழ்க மணமக்கள்

எலிகண்ட் பப்ளிசிட்டி. விளம்பர நிர்வாகி திரு. சத்தியம் அவர்களுக்கும்; திரு. ஆர். பி. சடகோபாச்சாரி அவர்களின் செல்வி விஜயலெட்சுமிக்கும் 9-6-63 அன்று திருப்பதியை அடுத்த திரிச்சனூரில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

மணமக்களுக்கு நமது வாழ்த்துக்கள்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரன் புறப்படுவதற்கான போர் முரசறைந்து—மக்களின் ஒத்துழைப்பை எல்லாவகையிலேயும் பெற்று எதிரியை விரட்டியடிப்பதற்குத் தயாராக வேண்டுமே தவிர, அவன் பட்டாளத்தோடு வந்து சுட்டுக்கொண்டிருக்கும் வேளையில் ஒருமைப்பாட்டைப் பற்றி மக்களிடத்தில் ஒப்பாரி வைத்துக்கொண்டிருப்பதில் விவேகம் இல்லை.

வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கும்போது ஓட்டை வாளி கொண்டு கீரைப் பாத்திக்குத் தண்ணீர் இரைத்து ஊற்றிக் கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனமான வேலை. இந்த வேலையைத்தான் இந்தியத் துணைக்கண்ட அரசின் காவலர்கள் மிகத் தீவிரமாகச் செய்ய முன் வந்திருக்கிறார்கள்.

சீனாக்காரன் வந்து பிடரி மயிரை இழு இழு என்று இழுத்த பிறகு தான் — தேசபக்தி, தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சி, தேசிய கீதம் இவைகளை நாட்டு மக்களிடை பரப்ப வேண்டும் என்ற ஞானோதயம் டெல்லித் தலைவர்களுக்கு உதித்துள்ளது.

தேசபக்தி பெருக்கெடுக்கச் செய்யப்படும் பிரச்சார முறைகளில் ஒன்றாக— திரைப்படக் கொட்டகைகளில் படக்காட்சி முடிந்தவுடன் "ஜன கன மன" என்ற தேசிய கீதம் ஒலிககப் பட வேண்டும் என்ற கட்டாய முறை.

சென்னையிலுள்ள சில திரைப் படக் கொட்டகைகளில் இந்தப் பிரச்சார முறை செயல்பட்டு வருகிறது.

படக்காட்சி முடிந்தவுடன் திரையில் தேசியக் கொடியின் அமைப்பு அடங்கிய சிலேடு போடப் படுகிறது. அதன் பின்னணியில் தேசிய கீதம் ஒலி பரப்பப்படுகிறது. மக்கள் கொட்டாவி விட்டபடி கும்பல் கும்பலாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

தேசிய கீதத்தின் புனிதத் தன்மைக்கு மக்கள் எவ்வளவு தூரம் மரியாதை தருகிறார்கள்?

தேசிய கீதம் இசைக்கப் படுகின்றபொழுது எழுந்து கை கட்டி, மௌனமாக நிற்கவேண்டும். அது தேசிய கீதத்திற்குத் தரப்படும் மரியாதை மட்டுமல்ல— இதய பூர்வமான ஒரு உணர்ச்சி. தூய்மை நிறைந்த அந்த உணர்ச்சி திரைப்படக் கொட்டகையில் எப்படிப் பொங்கி வழிகிறது?

அந்தக் கண்றாவிக் காட்சியை மந்திரி என்னும் மனிதர்கள் மாறு வேடத்தில் வந்தாகிலும் கண்குளிரக் காணவேண்டும்!

தலைக்கு மேலே கருடன் வட்டமிடுகிறது. அதைப் பார்த்து தாடையிலே தட்டிக் கொள்ளுகிறார்கள்! பல்லி சப்தமிடுகிறது —இவர்கள் மறக்காமல் பதிலுக்குச் சூள் கொட்டுகிறார்கள். பூனை குறுக்கே ஓடினால் பயணத்தை நிறுத்தி, பத்தடி பின் வாங்கி—பிறகு நடக்கிறார்கள் இது மூட நம்பிக்கை நிறைந்த செயல் என்றாலும் அது மக்கள் மனதில் ஊறிக்கிடக்கிறது. அதனால் தான் பூனை குறுக்கே ஓடினால் நின்று போக வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்படுகிறது. ஆனால் தேசிய கீதம் பாடப்படுகின்ற பொழுது நின்று கலைவோம் என்ற உணர்ச்சி ஏற்பட வில்லை? ஏன் ஏற்பட வில்லை? அந்த உணர்ச்சியை ஆரம்ப முதல் காங்கிரஸ்காரர்கள் மக்களிடம் வளர்த்து வைக்க வில்லை.

ஊட்டப்படுவதோ —வளர்க்கப் படுவதோ அல்லவே தேசிய உணர்ச்சி. அது ஏன் மக்கள் மனதில் இயற்கையாக எழாது போயிற்று?

அதற்குக் காரணம் — கிடைத்த சுதந்திரம் ஏழை மக்களுக்குப் பயன் படவில்லை. விடுதலை விளக்கின் ஒளி ஏழை எழியவர்களின் குடிசைகளில் பிரகாசிக்கவே இல்லை. சுதந்திரக் கனியின் சுவை நடுத்தர மக்களுக்குகிடைக்கவே இல்லை —காந்திகண்ட ராமராஜ்யத்தின் பலன் அத்தனையும் மாளிகைகளுக்குள்ளேயும், நிலப் பிரபுக்கள், செல்வச் சீமான்கள், ஆலை அரசர்கள், மிட்டா மிராசுகள் ஆகியோரின் பங்களாக் குள்ளேயும் பதுங்கிக் கொண்டது.

பாரத மாதாவின் கை விலங்குகளை உடைத்தெறிய எந்தச் சமுதாயம் போராடியதோ — காந்தியாரின் கட்டளைகளுக்குப் பணிந்து யார் சத்தியாக்கிரகத்திலும், அறப்போரிலும் ஈடுபட்டார்களோ— எந்தக் குடும்பத்தினர் தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொண்டார்களோ அந்தச் சமுதாயத்தினர் சுதந்திரத்தின் பலனை நூற்றில் ஒரு பங்கு கூட அனுபவிக்கவில்லை. மாறாக அவர்கள் வாழ்வின் நிம்மதியை இழந்தனர்-துச்சமாக மதிக்கப் பட்டனர். மீண்டும் வறுமைப் பேயை எதிர்த்து வாழ்க்கைப் போர் நடத்த வேண்டிய கீழ் நிலைமைக்குத்தள்ளப் பட்டனர்.

சுதந்திரத்திற்கு யார் யார் பரம வைரியாக இருந்தார்களோ, பரங்கியனுக்கு யார் படுதா விரித்துக் கொடுத்தார்களோ, வெள்ளையனும் அந்தக் கொள்ளையனுக்கு யார் குடை பிடித்துக் கொண்டு திரிந்தார்களோ அவர்கள்தான் சுதந்திரம் கிடைத்ததும் பதவிக்கு வந்தார்கள். அதிகாரத்திலே குந்தினார்கள், பர்மிட், கோட்டா, லைசன்ஸ்பெற்று மேலும் வளர்ந்தார்கள். சுதந்திரத்திற்காகத் தியாகத் தழும்பேற்றுக் கொண்ட குடும்பத்தை சேர்ந்தவன் திருவோடு தூக்க வேண்டியவனானன்— காங்கிரஸ் உயர் பீடத்தை சுய நல வெறியர்கள் ஆக்கிரமித்துக் கொள்ளத் தொடங்கினார்கள். பதவிப் போரும்– பர்மிட் போராட்டமும்– கொள்கைப் பூசலும் காங்கிரஸ் கூடாரத்தை விட்டு முச்சந்தி சிரிக்கும் வரை முற்றத் தொடங்கியது. சில பண முதலைகள் காங்கிரஸ் கட்சியை தங்கள் ஏக போகச் சொத்தாகச் சுவீகரித்துக் கொண்டன. கனி தின்ன மட்டுமே வந்த வவ்வால் களுக்கு ஏது தேச பக்தி? எப்படி வரும் நாட்டுப் பற்று?

அண்ணல் காந்தியாரின் தலைமையில் அரும்பாடு பட்டுக் கிடைத்த சுதந்திரம் சில சுக போகிகளால் சூறையாடப்படும் பொழுது நாட்டு மக்களுக்கு மட்டும் எங்கிருந்து வரும் தேச பக்தி? வெறுப்பு வளர்ந்திருக்கிறது! அது நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது.

வெள்ளைக்காரன் வெளியேறிய நாளிலிருந்து – முடி சூட்டிக் கொண்ட டெல்லி சர்க்கார் நடந்து வரும் முறையும், செயலும். ஓரவஞ்சகத் தன்மை படைத்த போக்கும், ஆதிக்க மனப்பான்மையும்– "இன்னும் நாம் யாருக்கோ அடிமையாக இருக்கிறோம்" என்ற எண்ணத்தை தென்னக மக்களின் மனதில் புகையச் செய்திருக்கிறது! கிடைத்த சுதந்திரம் முழுமையானதல்ல, என்பதை மெல்ல மெல்ல உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

சுதந்திர விதை கிடைத்ததும் மக்கள் மனதில்அதைப் பதித்து எல்லோர்க்கும் சமமான வாழ்வு எனும் தண்ணீர் பாய்ச்சி, நாட்டுப் பற்று எனும் செடியை வளர்க்க, காங்கிரஸ்காரர்கள் தவறி விட்டார்கள்.

கம்யூனிஸ்ட் சீனன் வெள்ளிப் பனிமலையின் விளிம்பினைத் தாண்டி வந்து பிடரியிலே

(4-ம் பக்கம் பார்க்க)



வேட்டியைத் துவைக்கும் போதும் விட வில்லை கொள்கைப் பற்று! துவைத்த துணியை முறுக்கி டி. எம். கே. என அமைத்து மகிழ்கின்றனர் சலவைத் தொழிலாளர்கள்.

வாழ்க! வளர்க!

'முரசொலி' துணை ஆசிரியர் அடியார் அவர்கள் 18. 6. 63 அன்று ஒரு ஆண் மகவுக்குத் தந்தையானார் என்ற செய்தி கேட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

செல்வன் வாழ்க! வளர்க! என வாழ்த்துகிறோம்.

ஆ-ர்.

தினகரன்

-ம் பக்கத் தொடர்ச்சி)

லேகியம் போட்டவர்களைப் போல் குதிப்பதும் இதற்காகத் தான்.

முற்போக்கு வாதிகளாக விளம்பரப்படுத்திக் கொள்வ தால் முதுகிலே அடி விழு வதற்கு முன்னுல் முகத்திலே முத்தம் கிடைக்கும், முக்கிய மான தலைமறைவுத் தலைவர்கள் நிரந்தரவியாதித்தீரர்கள் பரால் பராகிகள் — எல்லோரும் விடு தலை பெருவார்கள்' அந்த அடிப் படையில் தான் திருவண்ணு மலைக்குத் திரள்கிருர்கள்!

அகில இந்தியப் பொதுச் செயலாளர் 'அட்ரஸ்' அநாம தேய மாகிவிட்டது! அந்த ஐயா யிரம் நோய்த் தலைவர் டாங்கே திருபளாளி வெற்றி கேட்டு வெட்கம் கொட்டக் குனிந்து விட்டார்! இங்கே வழிப்பறித் தலைவர் வாயைப் பிளக்கிருர்!

காமராசருடைய வெற்றிச் சேதிகள் கருணையாற்றுக் கதா நாயகர்களால் தான் என்று மெய்யாக்கசெந்தொண்டர்கள், செந் தமிழ்ச் செல்விகள். செங் கொடியேந்திப் புறப்பட்டு விட் டார்கள்! கலைமன்றம் தந்த களிப்போ அல்லது களைப்போ மேடையிலே மயக்கம் போட்டு வீழ்ந்து வாந்தியெடுக்கிருர்கள்! வாந்தி யெடுத்தாலும் சரி, மாடு களின் வாலை விடமாட்டோம் என அடித் தண்டங்கள் அறை கூவல் விடுகின்றன! காங்கிரசுக் கட்சியினரும். கதாநாயகன் காமராசரும் தனது வில்லன் வேடத்தை வேகமாக்கி விட் டார். வேலையற்றதுகள் அனைத் தும் அவர்பின்னுலே வாலை ஆட் டிக்கொண்டே ஓடிக்கொண்டுள் ளன.

கட்டணம் கேட்காத கட்சி கள், வீடுகளை வாடகைக்கு விடு வது போல கட்சியின் கிளைகளை ஏலம் போட்டு விட்ட ஏமாளி கள். மக்களின் வாழ்வுக்கு மரணச்சீட்டுகள் வழங்கி விட்ட வகைகெட்டவர்களுக்கு வரவேற்புத் தந்து விட்டன! செத்துவிட்ட பொற்கொல்லர் கள், சாகடித்துக்கொண்ட நெச வாளர்கள், வேட்டையிடப் பட்ட நல்லவர்கள், சிலரிடம் இரத்த வெள்ளத்தில் விருந்து தின்ற விருதுநகர் விந்தை மனி தர்களுக்கு எடுபிடிகளாக மாறி விட்டார்கள்! முன்னேற்றக் கழ கத்தை எதிர்க்கிருேம் என்பது முதல் காரணம்!

கலை மன்றங்கள்—விவசாய சங்கங்கள் — தொழிற்சாலைகள் —எல்லாம் எங்களுககே எனப் புலம்பும் 'ஜெனரல் ஒர்க்கர்ஸ் தலைவர்கள்' ஏன் தங்கள் கட்சியை தேர்தலுக்கு விடாமல் தமிழ்நாடு காங்கிரசுக் சமிட் டிக்கு வாடகைக்கு விடவேண் டும்? சிறைக்கஞ்சாத சிங்கத்

திருமணம்

தலைமைக் கழக செயலாளர் கே. ஏ யழகன் இளவல் கே. ஏ. கிருஷ்ணசாமி, எம்.ஏ ருக்கும் சூலூர் திரு. ஆர். எஸ். முனியப்ப பி வர்களின் செல்வி புனிதவதிக்கும் 1-7-63 அன் வை மாவட் டம் சூலூர் சண்முகா தே ஃயில் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமை மணம் நடை பெறும்.

தலைவர்களை அண்டர்கிரவுண்ட் அய்யர்களை வெளியே கொண்டு வருவதற்காகவா? 'நேருக்கு நேர்' பேசும் நேர்மையற்றவர் கள் நேரத்தைக் கடத்தாமல் பேசட்டும்.

திராவிட முன்னேற்றக் கழ த்தைதிருச்செங்கோட்டில்வெற் றிபெற செய்தவர்கள் விலைக்கு வாங்கப் பட்டவர்கள் அல்ல! தமிழ் நாட்டுக் காங்கிரசுத் தலை வர்கள் வெளியிட்ட சுற் றறிக்கை தங்கள் ஆட்சியின் சாதனைகளைச் சொல்ல மிகவும் அதிகமாக வெட்கப்படுவதால், 'ஆட்கள் தேவை, ஆதரவாளர் கள் தேவை' என்று எழுதிக் கேட்டுள்ளது! காளை மாட்டுத் தலைவர்கள் கலைஞரின் முர சொலிக்கு இன்றுவரை பதில் சொல்லவில்லை.

கசாப்புக்கடை ஆட்களுக்குக் கழுத்தறுப்புக்கட்சி கால் பிடிப் பதில் யாருக்கும் கவலையில்லை! கழகத்தின் பொதுச் செய லாளர் கட்சித் தலைவருக்கும் ஆட்சித் தலைவருக்கும் எத் தனையோ வகையான வினுக் களைத் தந்திருக்கிருர். ஒன் றிற்காவது ஒழுங்கான பதில் தரும் பெருமை எவருக்காவது உண்டா?

தோண்டும் மந்திரியிலிருந்து எதையும் தோண்டத் தெரியாத மந்திரிவரை எவரும் அறிஞர் அண்ணவின் அருமையான அறைகூவலுக்குச் சரியான பதில் சொல்லவில்லை.

கழகத்தால் கோடு உயர்ந் தது போல குன்றம் உயர்ந்தது போல் திருவண்ணமலையும் திரு விடத்தின் புகழ்பரப்பும். போடி யிலே குவிந்த அம்மையார் களின் அணிவகுப்பு அண்ணு மலைக்கும் வருகிறது—அண்ணு வின் படையும் தன் கடமை யைச் செய்யக்காத்திருக்கிறது!

இடையிலே இருக்கும் இரு கிழமைகள், இலட்சப் பெட்டி களை இலஞ்சப் பொருட்களை இருட்டுவேலைகளை, இலட்சியப் படையினர் சந்திக்கும் கால மாகும்! மந்திரிசபையின் மயக்கு வேலைகளை சண்முகத்தின் வெற்றிச் சேதி வடபுலத்து ஏமாளிகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். எடுபிடிகள் ஏங்கித் தவிக்க வேண்டும்.

எழுச்சி முரசு கொட்ட எல் லோரும் வருக!

புறங்காட்டு...!

— புலவர் கோவைவாணன் —

இந்திக் கிங்கே ஆதிக்கமோ? இனியும்
இன்றமிழ் நாட்டைச் சோதிக்குமோ?
சந்தி சிரித்திடும் செயலன்ருே?—இந்திச்
சழுக்கருக் கேனுே வெறியாட்டம்?

எத்தித் திரிந்திடும் கூட்டமென— நமை
எண்ணித் திரிபவர் வீரர்களோ?
நத்தித் திரிபவர் நாமல்ல;—அந்த
நரிகளுக் கின்றே புலியாவோம்!

எங்கே இந்தி நுழைந்துவிடும்?— அதற்கு
எத்தனைக் கொம்புகள் முளைத்திருக்கும்?
சங்கே முழங்கு முழங்கிடுக தமிழ்ச்
சங்கே விண்ணைக் சாடிடுக!

தூண்டிற் புழுவென எமையெண்ணி— இந்தி
துரத்தி யடிக்க வந்திடுமோ?
ஆண்டிடப் போந்த மரபினர் நாம்— என
ஆட்டிப் படைத்தே ஓட்டிடுவோம்!

பெட்டிப் பாம்பினர் நாமல்ல—அதை
பேதையர்க் கின்றே உணர்த்திடுக!
தட்டிக் கழிப்பவர் யாரென்றே— அந்தத்
தருக்கருக் கின்றே காட்டிடுக!

எட்டிக் காயல வோ இந்தி? —அதற்கு
எப்படி அரியா சனம்தருவார்?
வெட்டிச் சாய்த்திடத் தோள்தட்டு!—அந்த
வீணர் குலத்தினைப் புறங்காட்டு!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டால்ஸ்டாயின் மறைவுசோபி யாவை முழுக்க முழுக்க மாற்றி விட்டது. ஆரவாரமற்று, அமை தியாக வாழ்ந்த அவள் எப் போதும் தனிமையிலேயே தன் னைப் புதைத்துக் கொண்டு மூளாப் பெருந்துயரிலேயேதன் இறுதி நாட்களைக் கழித்தாள்.

குடும்ப பிரச்னைகளோ, குழந் தைகள் பற்றிய எண்ணங் களோ பிறகு அவளை அலட்ட வில்லை. டால்ஸ்டாய் இருந்த போது சோபியா எதையெல் லாம் கண்மண் தெரியாமல் விரும்பினுளோ அவை அனைத் தையும் புறக்கணித்து வாழ்ந் தாள்.

டால்ஸ்டாய்க்குப் பின் ஒன் பது வருடங்கள்தான் சோபியா வாழ்ந்தாள். மரணப் படுக்கை யிலிருக்கும் போது அவள் இளைய மகளான அலெக்ஸாண் டிரியாவை அழைத்து மிகுந்த சிரமத்தோடு சொன்னுள் :

"நான்தான் அவரைக்கொன் றேன் என்பது எனக்குத் தெரி யும், அப்போதைக்கு எனக்குப் பைத்தியம்தான் பிடித்திருந் தது. கடைசிவரை நான் அவ ருக்கு நம்பிக்கைவாய்ந்தமனைவி யாகவே இருந்தேன்."

சோபியாவின் இந்த சொற் கள் உண்மை ஒளி நிரம்பிய உள்ளத்திலிருந்துதான் வெளி வந்திருக்கவேண்டும்!

Regd No: M 7640 விலை 16 காசு

கலைச்சோலை

பார்த்த படம்

முருகன் பிரதர்ஸ்

நானும் ஒரு பெண்

வீரத் திருமகளைத் தந்தவர்களாயிற்றே என்று அச்சப்படத் தேவையில்லை. அவர்களால் ஒரு வெற்றித் திருமகளையும் தரமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். முருகன் பிரதர்சார் தந்திருக்கும் ஒளிவிடும் நல்முத்து "நானும் ஒரு பெண்"

சிவந்த மேனி, சித்திரம் போல் உருவம் கல்லூரிப் படிப்பு—ஒரு பெண்ணுக்கு இருக்கவேண்டிய இலட்சணம் இதுதான் என்று தவறான கற்பனையில் உருண்டு கொண்டிருக்கும் இக்கால இளைஞர்களுக்கு நானும் ஒரு பெண் நல்ல படிப்பினையைத் தருவாள்.

கறுப்பாகப் பிறந்துவிட்டாள் என்ற காரணத்திற்காகப்பார்ப்பவர் கண்களிலிருந்தெல்லாம் அவள் ஒதுக்கி வைக்கப்படுகிறாள். சந்தர்ப்ப வசத்தால் பெரிய இடத்து அழகான இளைஞன் அவளைத் திருமணம் செய்து கொள்ளுகிறான். பூவோடும் மஞ்சளோடும் வரும் புதுப் பெண்ணை—மருமகளாக வரவேற்க வேண்டிய மாமனார்—கறுப்புப் பேயென்று ஒதுக்கி வைக்கிறார். முதலிரவிலேயே எறிந்து விழுகிறான் கணவன். அவள் கற்புக்கே களங்கம் சூட்டப்படுகிறது. அவள் இத்தனை துன்பங்களையும் தாங்கிக் கொண்டு இருள்சூழ்ந்து கிடந்த அந்த மாளிகையில் குடும்ப விளக்காக — புடம் போட்ட தங்கமாகப் பிரகாசித்து வெற்றி பெறுகிறாள்.

கண்ணில் முக்கியத்துவம் பெற்ற கறுப்பு விழியைப்போல் —அந்த குடும்பத்திற்கே ஒளியாகப் பயன்படுகிறாள் கறுப்புப் பெண்! இதுதான் கதையின் கரு.

கறுப்புப் பெண்ணை நடிக்கும் விஜயகுமாரி குறிப்பிட்டுச் சொல்ல விடாமல் ஒவ்வொரு கட்டத்திலும் மிக அருமையாக நடித்துள்ளார். தன்னைத் தவிர அந்தப் பாத்திரத்திற்கு வேறு யாரும் உயிர் கொடுக்க முடியாது என்ற வெற்றி முத்திரையைப் பெறுகிறார் விஜயகுமாரி.

முதலிரவுக் காட்சியில் "என்னைப் பிடித்திருக்கிறதா உங்களுக்கு?"-என்று விஜயகுமாரி கேட்க—தான் எழுதிய அழகான ஓவியத்தைப் பார்த்தபடி "உன் குணம் எனக்குப் பிடித்திருக்கிறது"—என்று சொல்லி குமுறிக் குழையும் பொழுதும், நண்பர்களுக்கு ஏன் விருந்து சமைத்து வைக்கவில்லை என்று விஜயகுமாரியிடம் ஆர்ப்பரிக்கும் கட்டத்திலும் எஸ். எஸ். ராஜேந்திரன் சிறப்பாக நடித்துள்ளார்.

எஸ். வி. ரங்காராவ், எஸ்.வி. சுப்பையா—எந்தப் படத்தில் சோடை போயிருக்கிறார்கள்? கதை பழைய பஞ்சாங்கமாக இருந்தாலும் அவர்களைப் பொறுத்தவரை சிறப்பாக நடித்து விடுவார்கள். நானும் ஒரு பெண்ணில் அவர்களுக்குத் தகுந்த பாத்திரம். இருவரும் அற்புதமாக நடித்துள்ளார்கள்.

படுத்த படுக்கையாகக் கிடக்கும் ரங்காராவிடம் பத்திரத்தில் கையெழுத்து வாங்க போலிக் கண்ணீர் வடிக்கும் கட்டத்திலும்—திருடிவிட்டு விஜயகுமாரியிடம் மன்னிப்புக் கேட்கும் காட்சியிலும் சிறப்பாக நடித்துள்ளார் எம். ஆர். ராதா.

புதுமுகம் ராஜன் நன்றாக நடித்திருக்கிறார். 'ஏமாறச் சொன்னது நானா' என்ற பாட்டைப் பாடிக் கொண்டு அவர் ஆடும் ஆட்டம் தியேட்டரில் கலகலப்பை உண்டாக்குகிறது.

புஷ்பலதா குளுமையாக வந்து, கவர்ச்சியாக ஆடி, தெளிவாக நடித்திருக்கிறார்.

நாகேஷைப் பொறுத்தவரை அரை குறைத் திருப்திதான் என்றாலும் — மனோரமாவிடம் அதிலும் குறைவு.

"கறுமை நிறக்கண்ணா, பூப்போல பூப்போல, ஏமாறச் சொன்னது நானா" ஆகிய பாடல்கள் இனிமையாக இருக்கின்றன.

சிறப்பான டைரக்ஷன்.

ரங்காராவ் தன் மனைவியின் படத்தைப் பார்த்து அடிக்கடி பிதற்றி அழுவதைச் சற்றுக் குறைத்திருக்கலாம். இப்படிச் சில குறைகள் அங்குமிங்கும் தென்பட்டாலும்—

ஏ. வி. எம்மின் மூன்று குமாரர்கள் சேர்ந்து தயாரித்திருக்கும் நானும் ஒரு பெண் முக்கனியின் சுவை தருகிறாள்.

வாழ்த்தும் வரவேற்பும்

15-6-63 பம்பாய்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு 9-6-63ம் தேதி இந்தி எதிர்ப்பு மலர் 15-6-63ல்தான் கிடைத்தது. 5 நாட்கள் தாமதமாக கிடைத்த போதிலும் மலருக்கு உள்ள மணம் குறையவில்லை. மலரின் பக்கங்கள் (28) இருபத்தி எட்டு, அத்தனையும் கற்கண்டு. பக்கத்திற்குப் பக்கம் படங்கள். விருவிருப்பு ஊட்டும் வரிகள். எழுச்சியூட்டும் கவிதைகள்—தலைவர்களின் கட்டுரைகள்—இத்தனையும் சேர்த்து எங்கள் தென்னகத் தலைவனை மணம் பரப்பும் படி செய்துவிட்டீர்கள். உங்களுக்கு என் நன்றி. மலரின் விலையை 75 புது காசுகள் என்று அறிவித்துவிட்டு 50 புது காசுகளுக்கு மலர் கிடைக்கும்படி செய்துவிட்டீர்கள். 25 காசுகள் நட்டத்தில் மலரை வெளியிட்டு இருப்பதைப் பாராட்டுகிறேன். "தென்னகத் தலைவன் மலர்" ஒவ்வொரு கழகத்தவர் கையிலும் இருக்கவேண்டிய "பொக்கிஷம்" நட்டத்தைப் பாராமல் கொள்கைக்காகவே போராடும்; தென்னகத் தலைவனுக்கு என் அன்பு கனிந்த நன்றி.

தென்னகத் தலைவன் வாழ்க! வாழ்க! வென வாழ்த்துகிறேன். வணக்கம்.

அன்புள்ள,

ஆர். டி. சாமுவேல்

பம்பாய்-7.

●

15-6-63 கோயம்புத்தூர்.

உண்மையில் தென்னகத் தலைவன் மலர் இவ்வளவு சிறப்பாக வெளிவரும் என்று எதிர்பார்க்கவே இல்லை. 75 காசிலிருந்து 50 காசு என்று அறிவித்தவுடன் ஏதோ சாதாரணமாகத்தான் வரும் என்று கடைக்காரரிடம் முன் பணம்கூடச் செலுத்தாமல் அலட்சியமாக இருந்தோம். குறிப்பிட்ட தேதிக்குள் வெளிவராதது கண்டு எங்களில் சிலருக்குச் சந்தேகம்கூட எழுந்தது.

ஆனால், மலர் கடைக்கு வந்ததும் ஆச்சரியப்பட்டுப் போனோம்; மலரின் ஒவ்வொரு பக்கமும் எங்களுக்கு 'முரசொலி மலரை' நினைவுபடுத்தின.

எல்லாக் கட்டுரைகளும் மிகச் சிறந்த கருத்துக் குவியல்கள். சில கட்டுரைகளை இரண்டு தடவைக்கு மேல் படித்துப் படித்து மகிழ்ந்தோம். இன்றைய தமிழ்த் துரோகிகளுக்கு தமிழ்மன்னர் காலத்திய மக்கள் மன்றம் அளித்துள்ள தண்டனைக் காட்சி எங்களைவிழுந்துவிழுந்து சிரிக்கவைத்தது. வரைந்த ஓவியருக்கு எங்கள் பாராட்டு. அதுபோன்ற கருத்துச் சித்திரம் இன்னும் நிறைய இடம் பெற்றிருக்கலாம்.

பல பத்திரிகைகளிலிருந்து தொகுத்துத் தரப்பட்டிருந்த கார்ட்டூன் நல்ல கருத்து விருந்து.

மலரில் நட்டம் என்று தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். 75 காசு விலை போட்டிருந்தால்கூட மலரின் சிறப்புக்கு அது தகும்.

நாங்கள் மில்லில் வேலை செய்பவர்களாகையால் தங்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுகட்ட, எங்களுக்குள் 'தென்னகத் தலைவன்' வளர்ச்சிக்கு நிதி வசூல் செய்து அனுப்பிவைக்கிறோம்.

நாங்கள் தென்னகத் தலைவனை ஆரம்ப இதழிலிருந்து தொடர்ந்து படித்து வருகிறோம். ஒவ்வொரு வாரமும் எங்களுக்குப் பல அரிய விஷயங்களைத் தந்துகொண்டிருக்கும் 'தென்னகத் தலைவன்' வாழ்க! வளர்க! என்று மனமார வாழ்த்துகிறோம்.

எங்கள் பகுதியில் தென்னகத் தலைவன் ஏடு என்றால் கம்யூனிஸ்டுகளுக்கு ஒரே கலக்கம். நெல்லைச் சதி வழக்கும் கம்யூனிஸ்டுகளைப் பற்றிய மற்ற உண்மைச் செய்திகளும் தங்கள் பத்திரிகையில் வெளிவந்ததைப்போல் வேறு எந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை. கம்யூனிஸ்டுகளின் துரோகத் தனத்தை தொடர்ந்து வெளியிடுங்கள். என்றும் எங்கள் ஆதரவு தென்னகத் தலைவனுக்கு உண்டு.

சி. என். ஆராவமுதன்	எஸ். டி. கிருஷ்ணசாமி
ஆர். பி. பாலசுந்தரம்	ஐ. பன்னீர்செல்வம்
எல். கோவிந்தன்	வி. என். பழனிச்சாமி.

ஆசிரியர், வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.